LIBRARY
14 MAY 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, the 29th September 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Fixation of tenancy rights and rent

* 1891 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குத்தகை, வார பாத்தியதையை (tenancy right) நிர்ணயிக்கச் சட்டம் கொண்டுவரும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI S. M. ANNAMALAI : இந்தச் சட்டமன்ற காலம் முடிவடைவதற்குள் இந்த மசோதாவைக் கொண்டுவர முடியுமா ? நியாயவாரத்தை உயர்த்துவதற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பிற்பாடு Tenancy Legislation வரும்போது கவனிக்கப்படும் என்று அன்றே கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுபற்றிய விஷயங்கள் தெளிவான பிற்பாடு இதைக் கொண்டுவரமுடியும்.

State Transport service during taxi drivers' strike

* 1892 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state the measures taken by the State Transport department for providing additional transport facilities during taxi drivers' strike in the Madras City from 24th July 1961?

THE HON. SRI V. RAMAIAH : Six special buses each from Egmore and Central Stations to important destinations, viz., Mylapore, Thiyagarayanagar, Ayyanavaram, Perambur, Tondiarpet and Hamilton Bridge were operated by the Madras State Transport Department in the mornings. In the evenings the special buses were operated from these termini to the stations. The timings of the special services were so arranged as to meet the incoming trains and take the intending passengers for outgoing trains. Luggage was also permitted to be carried in all the buses plying in the city and touching the railway stations.

SRI M. KALYANASUNDARAM : இந்த ஏற்பாடு பொதுமக்களுக்கு மிகவும் உபயோகமாக இருந்தது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியிருந்தால் இதைத் தொடர்ந்து நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த சர்வீசை தொடர்ந்து நடத்துவதற்கு வேண்டிய முயர்ச்சி இந்த இலாகா எடுத்துக்கொண்டு வருகிறது என்ற தகவல் என்னிடம் இருக்கிறது.